
# திராவிடத்தால் வாழ்கிறோம்

812

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மொழிவாரி மாகாணங்களை அம்பேத்கர் எதிர்த்தாரா?

இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக, மாநிலங்களின் கல்வி உரிமை, நிதி உரிமை, சட்டமியற்றும் உரிமை என சுயாட்சி உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்து, மாநிலங்கள் இல்லாத இந்தியாவாக மாற்ற முயன்று கொண்டிருக்கிறது பாரதிய ஜனதா கட்சி. இதற்கு அண்ணல் அம்பேத்கரை துணைக்கு இழுத்துக்கொண்டு, அவர் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக அவதூறு பரப்பிக் கொண்டிருக்கிறது பாரதிய ஜனதா கட்சி. அக்கட்சியின் மாநிலத் தலைவராக புதிதாகப் பொறுப்பேற்றுள்ள நயினார் நாகேந்திரன், சட்டமன்றத்தில் பேசும்போது, “மொழிவாரி மாகாணங்களை அண்ணல் அம்பேத்கர் எதிர்த்தார்” என்று பொய்யான தகவலைப் பதிவு செய்துள்ளார்.

வலதுசாரிகள் என்ற போர்வையில் ஊடக விவாதங்களில் விருப்பம்போல அவதூறுகளையும், பொய்யையும் சொல்வதைப் போல சட்டமன்றத்தையும் கையாள நினைத்த நயினார் நாகேந்திரனுக்கு, உடனே சரியான பதிலடியைத் தந்துள்ளார் ஆயிரம் விளக்கு தொகுதி எம்.எல்.ஏ. மருத்துவர் எழிலன் நாகநாதன். மாகாண மறுவரையறைக் குழுவின் அறிக்கைக்கு முன்பு அம்பேத்கரின் பார்வை மற்றும் அறிக்கைக்குப் பிந்தைய பார்வை ஆகியவற்றை ஒப்பிட்டு, மொழிவாரி மாநிலங்களை அம்பேத்கர் ஆதரித்ததை தரவுகளுடன் நிறுவினார் மருத்துவர் எழிலன் நாகநாதன். சட்டப் பேரவையில் அண்ணல் பெயரில் நயினார் நாகேந்திரன் பரப்பிய அவதூறு அந்த நொடியிலேயே சுக்குநூறாக உடைந்து நொறுங்கியது.

அண்ணல் அம்பேத்கர் சொல்லாததைச் சொன்னதாக அவதூறு பரப்பும் இவர்கள், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்று அம்பேத்கர் கூறினார், அதை திராவிட மாடல் நாயகர் நடைமுறைப்படுத்தினார். இதுகுறித்துப் பேசுவார்களா? தென் மாநிலங்களுக்கு தனியாக ஒரு தலைநகரம் அமைக்க வேண்டுமென்று அம்பேத்கர் கூறினார். அதை ஆதரித்து கருத்துச் சொல்வார்களா? என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### சிறுவனாக தளபதியைச் சந்தித்தேன்!



ஆ.கரிகாலன்

1993-ஆம் ஆண்டு ஜெயங்கொண்டம் வருகை தந்த அன்றைய மாநில இளைஞர் அணிச் செயலாளர், தற்போதைய கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களை கவிஞர் சுபா அவர்களின் இல்லத்தில் குடும்பத்துடன் சென்று சந்தித்தார் எனது தந்தை சி.ஆறுமுகம். நானும், எனது தங்கை பூங்கொடியும் பள்ளிச் சீருடையில் இருந்தோம். தளபதி ‘நன்றாகப் படிக்க வேண்டும்’ என எங்களை வாழ்த்தினார். அப்போது எடுத்துக் கொண்ட புகைப்படம், இன்று கழகப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கையில் திரும்பிப் பார்க்க வைக்கிறது.

– ஆ.கரிகாலன்,
நகர இளைஞர் அணி அமைப்பாளர்,
ஜெயங்கொண்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## ம்லருக

### மொழி உணர்வில் நாடாளுமன்றம்!

1957-ஆம் ஆண்டு மே 10-ஆம் தேதி, கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈ.வெ.கி.சம்பத்தும், தர்மலிங்கமும் தமிழிலேயே பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர். இதர மாநிலங்களில் இருந்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் தத்தமது தாய்மொழியிலேயே பதவிப்பிரமாணம் ஏற்றனர். சென்னை ஆங்கில நாளிதழ், பதவிப்பிரமாணத்தில் மொழி உணர்வே தலைதூக்கி இருந்தது என எழுதியது.

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

6

**பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.**

# கொக்கூரில் அடையாளம் இழந்த ஆதிக்கம்!

கொக்கூர் கிராமத்திற்குள் அக்ரஹாரம் வழியாகப் பெரியார் நுழைந்தபோது, அந்தத் தெருவில் பிறர் நுழையக் கூடாது என தடுக்கப்பட்டிருந்த தென்னை மரத் தடுப்புகள் தகர்த்து வீசப்பட்டன. பண்ணையார் ஐயர் குடும்பம் கதவைத் தாழிட்டுக்கொண்டது. மேல் சட்டையோடு, காலில் செருப்பு அணிந்துகொண்டு அக்ரஹாரத் தெருவுக்குள் ஐநூறுக்கும் மேற்பட்டோர் நுழைந்ததைக் கண்டு கொக்கூர் மக்கள் சுயமரியாதை உணர்வு பெற்றனர். அங்கிருந்து அரை கிலோ மீட்டருக்கு அப்பால்தான் கூட்டம் நடைபெற்றது. ஆனால் பெரியாரின் பேச்சை ஐயர் கேட்க வேண்டுமென்று அக்ரஹார முனையில் ஒலிபெருக்கி அமைத்திருந்தனர்.

3 மணி நேரம் பெரியார் பேசினார். கொக்கூர் மக்களின் மூளைகளில் இடப்பட்டிருந்த அடிமை விலங்கு அறுபட்டது. அதன்பின்னர்தான் எல்லோரும் கல்வி கற்றனர். அக்ரஹாரத் தெருவுக்குள் அனைவரும் துணிந்து செல்லத் தொடங்கினர். சிறுவனாக இருந்த பெரியாரியவாதி குஞ்சிதபாதம் அப்பகுதியின் திராவிடர் கழகத் தலைவரானார். முருகையன் செயலாளரானார். சுந்தரேசன் பொருளாளரானார்.

1957-இல் பெரியார் அறிவித்த சட்ட எரிப்புப் போராட்டத்தில் கொக்கூரில் இருந்து 4 பேர் பங்கேற்றனர். காவல்துறை கைது செய்யாததால், அதிருப்தி அடைந்து குத்தாலத்திற்குச் சென்று மீண்டும் கொளுத்தினர். இதே காலகட்டத்தில் பெரியாரியவாதி குஞ்சிதபாதத்தின் சகோதரர் கோவிந்தசாமி சிங்கப்பூரில் இருந்தார். மாதிரிமங்கலம் டி.என்.சாமியின் மனைவியின் சகோதரரான வீரையன் அப்போது சிங்கப்பூரில் திராவிடர் கழகத் தலைவராக இருந்தார்.



கொக்கூர் கோவிந்தசாமி

வீரையனே தேடிச்சென்று கோவிந்தசாமியைச் சந்தித்து திராவிடர் கழகத்தில் இணைத்தார்.

1959-இல் கோவிந்தசாமி கொக்கூர் திரும்பினார். அவரும் இந்தி எழுத்துக்கள் அழிப்பு, அஞ்சலக மறியல் என பல போராட்டங்களில் பங்கெடுத்து, சிறைக்குச் சென்றார். தீவிர கடவுள் பக்தியாளரான கோவிந்த சாமியின் அம்மா சிவபாக்கியத் தம்மாள் பகுத்தறிவாளராகி, கறுப்புப் புடவையுடன் நிகழ்ச்சிகளில் பங்கேற்கத் தொடங்கினார். அவரோடு மற்ற பெண்களும் வரத் தொடங்கினர். அந்த ஊரில் யார் இறந்தாலும், இறுதி ஊர்வலம் மேற்கு நோக்கித்தான் செல்லும். ஆனால் சிவபாக்கியத் தம்மாளுக்கு 1979-இல் உடல்நலம் குன்றியபோது, தனது உடலை கிழக்கு நோக்கி எடுத்துச் செல்லுங்கள் என்றார். கிழக்கே, அக்ரஹாரத் தெரு வழியாக எடுத்துச் செல்லுங்கள் என்பதைத்தான் அப்படிச்சொன்னார்.

அதன்படியே இறுதி ஊர்வலம் நடந்தது.

பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகி பெரியாரைச் சந்தித்த பின்பு, கொக்கூரில் உள்ள வீடுகள் எங்கும் தி.மு.கழகக் கொடியும் பறக்கத் தொடங்கியது. அங்கிருந்து 1 கிலோ மீட்டரில்தான் முன்னாள் அமைச்சர் கோ.சி.மணியின் வீடு இருந்தது. கொக்கூர் கொள்கைவாதிகளோடு மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தார் கோ.சி.மணி.



போர் ஷெட்

முருகையன் இருமுறையும், கோவிந்தசாமி ஒரு முறையும் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தனர். கொக்கூரில் 100% எல்லோரும் படித்துவிட்டனர். எண்ணற்ற ஜாதி மறுப்புத் திருமணங்கள் நடக்கின்றன. முதல் சுயமரியாதைத் திருமணமே முருகையன் திருமணம்தான். அது அண்ணா ஆட்சிக்கு வருவதற்கு முன்பே நடந்தது.

2022-இல் ஆசிரியர் கி.வீரமணி தலைமையில் தனது நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடிய கோவிந்தசாமி, கடந்த ஆண்டில் 101-வது வயதில் முடிவெய்தினார். கொக்கூர் கழ(ல)கக்காரர்களின் வாழும் சாட்சியமாக முருகையன் இன்றும் இருக்கிறார். ஆனால், பார்ப்பனர்கள் ஒருவர் கூட இப்போது அங்கே இல்லை. யாருக்கும் யாரும் ஆதிக்கம் இல்லை என பெரியாரியச் சிந்தனையில் ஊறிய கருப்பு-சிவப்பாக இன்றும் அந்த ஊர் காட்சியளிக்கிறது.

...பயணிப்போம்.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

58

**``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''**

# எம்.ஜி.ஆரையும் தெரியாத அடிமை அ.தி.மு.க!


சூளுரை ஏற்போம்
புரட்சித்தலைவர் பொங்கல் செய்தி
திருவள்ளுவர் திருநாள்
வள்ளுவர் கோட்டம் - சென்னை

**‘சித்திரை 1 தமிழ்ப் புத்தாண்டுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏன் வாழ்த்து தெரிவிக்கவில்லை?’ என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கேட்பதற்கும், ‘சித்திரை 1 புத்தாண்டுதான் ஜெயலலிதா கட்டிக்காத்த தமிழ்ப் பாரம்பரியம்’ என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் சொல்வதற்கும் தி.மு.க.வின் பதில் என்ன?**

பா.ஜ.க. மாநிலத் தலைவராகியிருக்கும் நயினார் நாகேந்திரன் பழைய அ.தி.மு.க. காரர்தான். ஜெயலலிதா ஆட்சியில் அமைச்சராகவும் இருந்தவர். ஜெயக்குமார் பல மேடைகளில் எம்.ஜி.ஆர். பாடல்களைப் பாடக்கூடியவர். அ.தி.மு.க.வின் நிறுவனரான எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது, தை 1 தான் புத்தாண்டின் தொடக்கம் என்ற திராவிடப் பாரம்பரியத்தைக் கடைப்பிடித்தவர் என்ற விவரம், ஜெயலலிதாவிடம் அமைச்சர்களாக இருந்த அடிமை அ.தி.மு.க.வினருக்குத் தெரிந்திருக்கவில்லை. அதுபோல, எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த காலத்தில் ஒரு போதும் தீபாவளிக்கோ, விநாயகர் சதுர்த்திக்கோ, ராமநவமிக்கோ வாழ்த்துச் சொன்னதில்லை. தமிழர் திருநாளான பொங்கல் நாளைத்தான் பெரியார், அண்ணா வழியில் அவர் கொண்டாடினார். தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட ஆரியப் பண்டிகைகளை தி.மு.க. போலவே அ.தி.மு.க.வின் நிறுவனரும் ஏற்கவில்லை. எம்.ஜி.ஆர். தன்னுடைய ஆட்சியில் திராவிட இயக்கத்தின் நெறிப்படி, தை முதல்நாளே தமிழ்ப்புத்தாண்டு என்பதை தன்னுடைய அறிக்கையிலேயே உறுதி செய்தார்.

> **எம்.ஜி.ஆர்., தை முதல்நாளே தமிழ்ப்புத்தாண்டு என்பதை தன்னுடைய அறிக்கையிலேயே உறுதி செய்தார்.**

ஜெயலலிதா முதலமைச்சரானபோது அவரைச் சுற்றியிருந்த ஆரியக் கூட்டத்திற்கு ஏற்ற வகையில் தீபாவளி, விநாயகர் சதுர்த்திக்கான வாழ்த்துகளில் தொடங்கி, கிருஷ்ண ஜெயந்திக்கு விடுமுறை விடுவது வரை பல தலைகீழ் மாற்றங்களைச் செய்து, திராவிடக் கொள்கைகளுக்கு மட்டுமின்றி, எம்.ஜி.ஆர். மேற்கொண்ட செயல்பாடுகளுக்கும் எதிராகவே நின்றார். ஜெயலலிதாவிடம் அமைச்சர்களாக இருந்த எடப்பாடி பழனிசாமி, நயினார் நாகேந்திரன், ஜெயக்குமார் உள்ளிட்ட எல்லோரும் அடிமைகளாக இருந்தார்கள்.

சித்திரை மாதத்தில் கடைப்பிடிக்கப்படும் புத்தாண்டில் உள்ள 60 பெயர்களில் ஒன்றுகூட தமிழ்ப்பெயர்கள் கிடையாது. இந்த ஆண்டுக்கு பெயர் ‘விசுவாவசு’. இதுபோலவே பிரபவ, விபவ என்று தொடங்கி அட்சய என முடிகிற 60 பெயர்களும் வடமொழிப் பெயர்கள்தான். இது எப்படி தமிழ்ப் புத்தாண்டாக இருக்க முடியும் எனத் தமிழறிஞர்களும் தமிழ்ப் புலவர்களும் கேள்வி எழுப்பியதுடன், தமிழ் மீதான ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பை முறியடிக்கும் வகையில் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்றும், வடமொழிப் பெயர்களைக் கொண்ட 60 ஆண்டுகால சுழற்சி கணக்குக்குப் பதிலாக, தமிழ்ப் புலவர் திருவள்ளுவர் பெயரிலான ஆண்டுக் கணக்கையும் முன்வைத்தனர். தமிழ்நாடு அரசின் சார்பில் திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கை 1971-இல் நடைமுறைப் படுத்தியவர் கலைஞர். 1981-இல் அதை அரசு அலுவலகங்கள் அனைத்திலும் பயன் படுத்த உத்தரவிட்டவர் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வினருக்கு அண்ணா, திராவிடம் என்பது வெறும் லேபிள் என்பது தெரியும். அவர்களுக்கு எம்.ஜி.ஆரையும்கூட தெரியவில்லை என்பது பரிதாபம்.

...வினா தொடரும்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131